# ஆகஸ்ட் 26 - புனித கலசாங்சியுஸ் சூசை (1556 – 1648)

இவர் வேத சாஸ்திரத்திலும், சட்டக் கல்வியிலும் தேர்ச்சி பெற்றார். 1582-ல் குருப்பட்டம் பெற்றார். இவர் புண்ணியவான் என்று இவரது கீர்த்தி எங்கும் பரவியிருந்தது. இதைக் கேள்விப்பட்ட வேரிதா நகர் ஆயர் இவரைத் தன் ஆன்ம குருவாகத் தேர்ந்து கொண்டார். ஓர் இரவு உரோமைக்குச் செல்ல வேண்டும் என்று காட்சி கண்டார். இவர் தந்தை இறந்ததும் உடைமைகள் எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு இவர் உரோமைக்குப் புறப்பட்டார். இங்கு சேர்ந்த பொழுது இவர் கையில் ஒரு காசு முதலாய் கிடையாது. உரோமையில் ஏற்பட்ட கொடிய கொள்ளை நோய்களின் விளைவாக, எண்ண முடியாத சிறுவர் சிறுமியர் அகதிகளாய் தெருக்களில் திரிந்தார்கள். எனவே அவர்களை கவனிக்கவும் கல்வி கற்பிக்கவும் பல அறைகளை வாடகைக்கு அமர்த்தி ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். வேறு பலர் இவரோடு உழைத்தார்கள். இவர் ஒரு புதுச்சபையைத் தொடங்கினார். தொல்லைகள் ஏராளமாய் வந்தன. இவரது சபையைச் சேர்ந்தவர்களே இவருக்கு விரோதமாக எழும்பி இவரைப் பிடித்து சிறையில் அடைத்தார்கள். அனைத்தையும் இவர் பொறுமையாகச் சகித்து பிறருக்கு எடுத்துக்காட்டாய் இருந்தார். தனது 92-ஆம வயதில் இறந்தார்.




**சிந்தனை:**
கடவுளுக்குச் சேவை செய்யும் நீ உனது சுகவசதிகளையே தேடுவாயானால், நீ கடவுளை சேவிப்பதில்லை உன்னையே சேவிக்கிறாய். (புனித கலசாங்சியுஸ் சூசை)

**செபம்:**
ஆண்டவரே, எங்கள் சுக வசதிகளையும் பெயர் கீர்த்தியையும் விட உம்மையே நாங்கள் நேசிக்கும் வரம் தாரும்.